www.ecourtsindia.com

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பரங்கிப்பேட்டை.**
**2022 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 07ம் நாள்**

**C.C.No.62/2018**

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)ன் விதிமுறைகளின் படி பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் (கூ.மு.பொ) திரு. கி.சக்திவேல், பி.காம். பி.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சசிக்குமார் | வயது | : | |
| த.பெ. | : | சேகர் | தொழில் | : | |
| ஊர் | : | | ஜாதி | : | |
| மாவட்டம் | : | | மதம் | : | |
| காவல் நிலையம் | : | | நிலை | : | P.W.5 |

**Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 07.10.2022**

**அரசு தரப்பில் முதல் விசாரணை –** நான் தெற்குத்தெரு, தச்சக்காட்டில் வசித்து வருகின்றேன். நான் விவசாய வேலை செய்து வருகின்றேன். ஆஜர் 1வது எதிரி மற்றும் 2,3 எதிரிகளை எனக்குத் தெரியும். என் ஊர்காரர்கள். அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்களை எனக்குத் தெரியும் அவர்களும் என் ஊரைச் சேர்ந்தவர்கள். தேதி நினைவில்லை. ஆஜர் 1 வது எதிரிக்கும் மற்ற எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் சண்டை நடந்ததாக என் ஊரில்உள்ளவர்கள் எனக்கு சொன்னார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். மேற்படி எனது கையெழுத்தினை நான் காவல் நிலையத்தில் வைத்து போலிசாரிடம் போட்டுக்கொடுத்தேன். **(பார்வைமகசரில் உள்ள என் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆகும்.)** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கேட்கப்பட்டதன் பெயரில் மேற்படி அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCD160002312018-orderno-1.pdf

ஆஜர் 1வது எதிரி மற்றும் 2,3 எதிரிகளை எனக்குத் தெரியும். என் ஊர்காரர்கள். அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்களை எனக்குத் தெரியும் அவர்களும் என் ஊரைச் சேர்ந்தவர்கள். சாட்சி பிச்சை முத்து என்பவரை எனக்குத் தெரியும். கடந்த 06.01.2018 ம் தேதி நடந்த வழக்கு சம்பவ இடத்தினை 07.01.2018 ம் தேதி மதியம் 12.00 மணிக்கு போலிசார் பார்வையிட்டு தயார் செய்த வரைபடத்திற்கு சாட்சியாக பார்வை மகசரில் நானும் சாட்சி பிச்சைமுத்து என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது எதிரிகள் என் ஊர்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல, எதிரிகள் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டியபின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.

**ஓம்/திரு.கி.சக்திவேல்,பி.காம்.,பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், பரங்கிப்பேட்டை(கூ.மு.பொ.)

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCD160002312018-orderno-1.pdf

www.ecourtsindia.com